தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 17, சித்ரபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034
2003 மார்ச் 31, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு"

தமது கடமையாகிய தொழிலுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம் இரக்கம் உள்ளவர்களாக இருக்கும் சிறந்த திறம் உடையவர்களுக்கு இந்த உலகமே உரிமை உடையதாகும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 141, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

141—

சீரமைக்கும் பணி

***1765—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநாவலூர் தொகுதியில் புத்தனந்தல் அணை மற்றும் ஆற்று வாய்க்காலைச் சீரமைக்கும் பணியினைச் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் தொகுதி, புத்தனந்தல் அணை மற்றும் ஆற்று வாய்க்காலைச் சீரமைக்கும் பணிக்காக ரூ.30 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி வினாவைத் தொடுக்கின்றேன். இந்த புத்தனந்தல் அணை மற்றும் ஆற்று வாய்க்கால் சுமார் 40 ஆண்டு காலமாகச் சீரமைக்கப்படாததன் காரணமாக ஏரிகளுக்கு நீர்வரத்து இல்லாமல் விவசாயப் பெருமக்களுக்கு பயன்படாத வகையில் இருந்து வருகின்ற காரணத்தால் இந்தக் கிராமத்திற்குச் சென்ற ஆண்டே பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் இந்த அணைக்கட்டைச் சீர் செய்யவும், தூர் வாருவதற்கும் ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணி எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அதனை அறிந்த அந்தப் பகுதி விவசாயப் பெருமக்களும், பொதுமக்களும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பத்திரிகை மூலமாகவும், மனுக்கள் மூலமாகவும் நன்றி தெரிவித்துள்ளார்கள். எனவே அந்தப் பகுதியிலே 40 ஆண்டு காலமாக இருக்கின்ற பிரச்சினையை இந்த நிதி ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் தொகுதி புத்தனந்தல் அணை மற்றும் ஆற்று வாய்க்காலைச் சீரமைக்கும் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும் என்பதையும், இக்கூடுதல் பணிக்கான கருத்துரு தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம் அவர்களால் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, வரும் நிதி ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப இப்பணி எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டிலே இப்பணி எடுத்துக்கொள்ளப்படும்

2003 மார்ச் 31]

என்பதைத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *142*, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

142—

மேம்பாலம்

***19812—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம்-செங்குன்றம் நெடுஞ்சாலை மேற்கு இரயில்வே கடவில் தரைப்பாலம்/மேம்பாலம் இல்லாததால் நெரிசல் மிகுந்த நேரங்களில் போக்குவரத்து பாதிக்கப்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வில்லிவாக்கம்-செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம் யார்டு அருகில் இரயில்வே கி.மீ. 9/25 முதல் 27 வரை இரயில்வே கடவு எண்-2க்குப் பதிலாகக் கட்டப்பட வேண்டியது மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் ஆகும். இப்பணியை இரயில்வே திட்டப் பணிகளில் சேர்க்க, முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்க இரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. நெப்போலியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய பதிலுக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது கடந்த வருடமே இந்தப் பட்டியலில் இடம் பெற்று இருக்கின்றது. வில்லிவாக்கத்தில் இருந்து செங்குன்றம் செல்லும் பாதையில் லெவல் கிராசிங்-2, வில்லிவாக்கத்திலிருந்து பெரம்பூர் செல்லும் பாதையில் லெவல் கிராசிங்-1, இந்த 2 இடங்களுக்கும் பாலம் தேவை என்று பொதுமக்கள் 20 ஆண்டு காலமாகப் போராடி வருகிறார்கள். ஆனால் எந்த நடவடிக்கையையும் மத்திய அரசாங்கமும்,